# திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்குச் சேகரிப்பு!



திருச்சி, ஏப். 12-

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட 42வது வார்டு பகுதிகளில் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அம்மன் நகர், விக்னேஷ் நகர், சக்தி நகர், கோகுல் நகர், பிரியங்கா நகர், சந்தோஷ் நகர், ஆலத்தூர் மற்றும் கீழக் கற்கண்டார் கோட்டை ஆகிய பகுதிகளில் வீடு வீடாகச் சென்று அவர் வாக்குச் சேகரித்தார்.

இப்பரப்புரை நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம் சிவக்குமார், தமிழ்ச் செல்வன், வட்டக் கழகச் செயலாளர்கள் கயிலைநாதன், புண்ணியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலைவாணி ரமேஷ், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆற்றிய உரையின் சிறப்பம்சங்கள்:

பிரச்சாரத்தின் போது மக்களிடையே உரையாற்றிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது:

தி.மு.க.வின் கோட்டை: "இந்தப் பகுதி எப்போதும் திமுகவிற்கு அதிக வாக்கு வித்தியாசத்தை (Leading) பெற்றுத் தரும் பகுதியாகும். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக மட்டுமல்லாமல், தற்போது கூட்டணிக் கட்சிகளின் கோட்டையாகவும் உருவெடுத்துள்ளது."

காலை உணவுத் திட்டம்: "பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்களின் நலனைப் பேணும் பொறுப்பை நீங்கள் எனக்கு அளித்துள்ளீர்கள். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் மற்றும் 'கேப்டன்' விஜயகாந்த் ஆகியோர் மறவர்களின் பசியை உணர்ந்து உணவளித்தவர்கள். அவர்களைத் தொடர்ந்து, நம் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக 'காலை உணவுத் திட்டத்தை' கொண்டு வந்துள்ளார். ஒரு பள்ளி மாணவி பசியோடு இருப்பதை அறிந்து, உடனடியாக அத்திட்டத்தைச் செயல்படுத்தினார். இன்று 20 லட்சம் பிள்ளைகள் பள்ளிக்கு வந்து வயிறாரச் சாப்பிடுகிறார்கள் என்றால், அந்தப் புண்ணியத்தில் என்னைத் தேர்ந்தெடுத்த திருவெறும்பூர் மக்களுக்கும் பெரும் பங்குண்டு."

தேர்தல் வாக்குறுதிகள்: "தற்போது 5ஆம் வகுப்பு வரை உள்ள காலை உணவுத் திட்டம், வரும் காலங்களில் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் எனத் தேர்தல் அறிக்கையில் முதல்வர் உறுதியளித்துள்ளார்.

மக்களுக்கான திட்டங்கள்: ★ விடியல் பயணம்: இத்திட்டத்தால் ஒரு குடும்பத் தலைவி மாதம் சராசரியாக 885 ரூபாய் வரை சேமிக்க முடிகிறது.

மகளிர் உரிமைத் தொகை: தற்போது வழங்கப்பட்டு வரும் 1,000 ரூபாய், திராவிட மாடல் அரசு மீண்டும் அமைந்தவுடன் 2,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

மகளிர் சுய உதவிக்குழுக்கள்: சுமார் 2,256 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, புதிய தொழில்கள் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி மற்றும் மருத்துவம்: புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் நலங் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்கள் என எண்ணற்ற சாதனைகளை இந்த அரசு செய்துள்ளது."

"நீங்கள் அளித்த ஒவ்வொரு வாக்கும் இந்த மகத்தான மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது. அந்த வளர்ச்சிப் பணிகள் தொடர மீண்டும் உங்கள் ஆதரவை வேண்டுகிறேன்" என அமைச்சர் உரையாற்றினார்.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### மூத்த ஊடகவியலாளர் 'தமிழ் கேள்வி' தி.செந்தில்வேலின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### தலைமைக் கழக அறிவிப்பு!

| நாள் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 13.04.2026 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 14.04.2026 | தேனி தெற்கு | ஆண்டிபட்டி |
| 15.04.2026 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| 16.04.2026 | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| 18.04.2026 | காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர் |
| 19.04.2026 | சென்னை தெற்கு | சைதாப்பேட்டை |

அண்ணா அறிவாலயம்
சென்னை – 18
நாள்: 10.04.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.



விராலிமலை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் விராலிமலை கிழக்கு ஒன்றியத்தில் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் விராலிமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், தமிழினியன், செல்லத்துரை மற்றும் மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் வேட்பாளர் மருத்துவர் எஸ்.டி.ஜெயலட்சுமி தீவிர வாக்கு பிரச்சாரத்தின் போது, ஆரத்தி எடுத்து பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்றனர். இதில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ஆ.கலியபெருமாள், தி.மு.க. பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் பரமேஷ்குமார், ஒன்றிய கழக செயலாளர் எம்.இராஜ்குமார், தலைமைக் கழக பேச்சாளர் எசனை ஆறுமுகம், கழக இளம் பேச்சாளர் காருண்யா நடராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொ.மு.ச.மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், நகர்மன்ற உறுப்பினர்கள் சித்தார்த்தன், ஜெயசித்ரா மணிவாசகம், ரகமத்துல்லா, பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலெட்சுமி சேகர், வேலூர் தமிழ்ச்செல்வன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் ஷாம், மற்றும் காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட், உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ப.இராணி, நாமக்கல் கிழக்கு மாநகரப் பகுதிகளில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஐந்தாண்டு கால தி.மு.க. அரசின் சாதனைகளை விளக்கி, தொடர்ச்சியான வளர்ச்சிக்காக தி.மு.க.வுக்கு வாக்களிக்குமாறு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



## தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். மூன்று கட்ட பரப்புரை முடிந்த நிலையில், நான்காம் கட்டமாக திருச்சியில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**12.4.2026 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.00 மணி | மன்னார்குடி | பெரியார் சிலை அருகில், மன்னார்குடி. |
| காலை 11.00 மணி | நாகப்பட்டினம் | நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் எதிரில், நாகப்பட்டினம். |
| மாலை 4.00 மணி | நன்னிலம் | ஒகை, குடவாசல். |
| மாலை 5.30 மணி | பூம்புகார் | மங்கைநல்லூர், குத்தாலம். |
| இரவு 7.00 மணி | குறிஞ்சிப்பாடி | வள்ளலார் பேருந்து நிலையம் எதிரில், வடலூர். |
| இரவு 8.00 மணி | நெய்வேலி | இந்திரா நகர், கும்பகோணம் சாலை, நெய்வேலி. |
| இரவு 9.00 மணி | திட்டக்குடி | பேருந்து நிலையம் அருகில், திட்டக்குடி. |

**13.4.2026 திங்கள்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | விழுப்புரம் | நான்கு முனை சாலை சிக்னல், விழுப்புரம். |
| காலை 10.45 மணி | திருக்கோவிலூர் | பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர். |
| மாலை 4.00 மணி | செஞ்சி | நான்கு முனைச் சந்திப்பு, விழுப்புரம் சாலை, செஞ்சி. |
| மாலை 5.30 மணி | திண்டிவனம் | செஞ்சி சாலை, திண்டிவனம். |
| இரவு 7.00 மணி | செங்கல்பட்டு | இராட்டினம் கிணறு, செங்கல்பட்டு. |
| இரவு 9.00 மணி | ஆலந்தூர் | அண்ணா சிலை அருகில், ஸ்டேட் பேங்க் குடியிருப்பு, நங்கநல்லூர். |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 11.4.2026

கலைஞர் 100
1924 - 2023





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. நாகரசம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட வேலம்பட்டி , நாகரசம்பட்டி , தட்டக்கல் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியும், வருகிற திராவிட மாடல் 2.0 ஆட்சியில் செயல்படுத்த உள்ள திட்டங்களையும் வாக்காளர்களுக்கு எடுத்துக்கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.